ஊழல்கள் நடந்து இருக்கின்றன என்பதை சர்க்கார் சுட்டிக்காட்டியும் அவர் இதுவரையில் அங்கு இருப்பதால் இந்த நிலைமை ஏற்படுகிறது என்று கருதப்படுகிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** என்னிடம் கனம் அங்கத்தினர் சொல்கிற தகவல் இல்லை. முக்கிய கேள்விக்கு பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். ஸி.எஸ்.ஆர்.—செக்ரட்டரியை ஸஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது.

## *Jain temples*

*165 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) the places where Jain temples are located in the State ;

(*b*) whether any representations have been received from the Jains on the preservation of these temples, architecture etc., and

(*c*) if so, the action taken thereon ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No information is available with the Government or with the Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

(*b*) and (*c*) Yes. A printed mahajar has been received from Sri T. S. Sripal on behalf of the Tamilnad Jain public in March 1965 requesting Government assistance for the preservation, renovation and repairs of certain Jain temples. He has listed about 17 temples which require urgent repairs. Action can be taken by the Hindu Religious and Charitable Endowments (Administration) Department only in respect of the Jain temples to which the Hindu Religious and Charitable Endowments Act, 1959 are extended. Three such temples have been sanctioned Government grant for repairs and renovation for 1965–66.

**திரு. சா. கணேசன் :** இந்தமாதிரி சமணர் பள்ளிகள், பாழிகள் நூற்றுக்கணக்கானவை தமிழகத்தில் இருக்கின்றன என்பதும் அவை பராமரிப்பற்று சிதலமாகிக்கொண்டு வருகின்றன என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த நிலையில் சமணர்களின் தொகை அருகிக் கொண்டு வருவதாலும், ஆலயங்கள் பலவாக இருப்பதினாலும், பராமரிக்கமுடியாத நிலை இருப்பதால் அந்த ஆலயங்களை ஓரளவிற்கு செப்பனிட்டும் அங்குள்ள பல விக்கிரகங்களை எல்லாம் தொகுத்துக்கொண்டுவந்து ஒரு இடத்தில் வைத்து ஒரு காட்சிசாலை மாதிரி அமைக்க ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் இந்த ஆலயங்களை எல்லாம் நமது
9–00 a.m. சட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டும். அதன் பின்னால் அதற்கான நோட்டிஃபிக்கேஷன் பிறப்பித்த பின்னால்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும். நான் குறிப்பிட்டது போன்று, இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற மூன்று ஆலயங்களிலும், நல்ல சிற்ப வேலைகள் இருக்கின்றன. நல்ல விக்ரகங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்ற முறையில் இதற்கான நோட்டி.·.பிக்கேஷன் செய்யப்பட்டு இப்போது உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்வதற்கும் அரசாங்கம் முயற்சி செய்யும்.

3rd March 1966]

**திரு. சா. கணேசன் :** குறிப்பாக விஜயமங்கலம் என்னும் ஊரில் இருக்கின்ற ஆலயத்தில் பூஜை செய்து வருபவர் நான் இதை விட்டுவிட்டு போய்விடுகிறேன் என்று நோட்டீஸ் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இந்த இடத்தில் பெருங்கதை ஆக்கிய பெரும் புலவர், சிந்தாமணியை ஆக்கிய பெரும் புலவர் போன்ற இவர்களது சிலைகள் இருக்கின்றன. இந்தியாவிலேயே இந்த ஓரிடத்தில்தான் அவை இருப்பதாகத் தெரிகிறது. அவற்றையெல்லாம் எடுத்து, பாதுகாத்து, பழம்பொருள் காட்சியாக வைக்கலாம். அதுமட்டுமல்ல, அவற்றை வரலாற்று சிறப்புமிக்க பொருட்களாகவும் வைத்திருக்கலாம். ஆகையால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது மூன்று இடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரத்தில் திருப்பருத்திக்குன்றம், வந்தவாசியில் பேரடூர், வெங்குன்றத்தில் அரகூர். இந்த இடங்களிலுள்ள ஆலயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட ஆலயங்களை எடுத்துக்கொள்வதற்கான நோட்டிபிக்கேஷன் பிறப்பிக்கவேண்டும். இவற்றையெல்லாம் அரசாங்கம் அவ்வப்போது கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** சமணர்கள் அனுப்பிய முறையீடுகளில் இந்த மூன்று இடங்களிலுள்ள ஆலயங்களை மட்டும் தான் குறிப்பிட்டிருந்தார்களா ? மேலும் குறிப்பிட்டிருந்தால் அவை எங்கெங்கு என்பதைத் தெரிவிக்கலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது அரசாங்கம் மூன்று இடங்களிலுள்ள ஆலயங்களை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். அவர்கள் குறிப்பிட்டிருப்பது 17 ஆலயங்களைப்பற்றியது. பின்னால், ஒவ்வொன்றாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த 165–வது கேள்வியில் ‘‘சமணர் பள்ளிகள்’’ என்று தலைப்பு இருக்கிறது. நான் ஏதாவது ஸ்கூலைப்பற்றி இருக்குமோ என்று நினைத்து உள்ளே பார்த்தேன் ஆலயங்களைப்பற்றியதாக இருக்கிறது. ஏன் இதற்கு ஆலயங்கள் என்று தலைப்பு கொடுக்காமல் பள்ளிகள் என்று மாற்றிக் கொடுத்திருப்பானேன் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆலயத்தைப்பற்றித்தான் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** ‘‘டெம்பிள்ஸை’’ ‘‘பள்ளிகள்’’ என்றும் சொல்வதுண்டு என்று சொல்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** ‘‘சமணர் பள்ளிகள்’’ என்பது ‘‘சமணர் ஆலயங்கள்’’ தான். அங்கே ஸ்கூல் வைத்து நடத்தியதின் காரணமாகத்தான் ‘‘பள்ளி’’ என்ற பெயர் வந்தது. பள்ளி என்ற சொல் சமணர்—பௌத்தர் ஆலயங்களையே தான் குறிக்கும்.

**கனம் சபாநாயகர் :** தனித் தமிழை விரும்புகிறவர்கள் ஜாக்கிரதையாக கேள்வி கேட்கவேண்டும்.

### தேவிமங்கலம் கிராமத்தில் புதையல்

***166 கேள்வி—திரு. மு. கருணாநிதி :** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள ‘தேவிமங்கலம்’ என்ற கிராமத்தில் ‘புதையல்’ ஏதேனும் கிடைத்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்த இடத்தில் விரிவான ஆராய்ச்சியை மேற்கொள்ளும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?